# யாழ் இந்திய துணைத் தூதரகம்
# யாழ்ப்பாணம்
# ஊடக அறிக்கை

யாழ் இந்திய துணைத் தூதரகமானது மகாகவி சுப்பிரமணிய பாரதியாரின் 137வது பிறந்த நாளை முன்னிட்டு இன்று (11 டிசம்பர் 2019) காலை 11 மணிக்கு நல்லூரில் அமைந்துள்ள மகாகவி சுப்பிரமணிய பாரதியாரின் திருவுருவச் சிலை முன்றலில் மலர் மாலை அணிவித்து மதிப்பளிக்கும் நிகழ்வினை ஏற்பாடு செய்திருந்தது.

2. வடமாகாண அவைத்தலைவர் கௌரவ C V K சிவஞானம், வணக்கத்திற்குரிய யாழ் மாநகரசபை முதல்வர் இமானுவேல் ஆனோல்ட், யாழ் மாவட்ட அரசாங்க அதிபர் திரு வேதநாயகன் உட்பட பல பிரமுகர்களும், தூதரக அலுவலர்களும், மாணவர்களும் பொது மக்களும் நிகழ்வில் கலந்து கொண்டனர்.

3. இந்தியத் துணைத் தூதுவர் திரு ச பாலச்சந்திரன், வடமாகாண அவைத்தலைவர் கௌரவ C V K சிவஞானம் உட்பட வருகை தந்திருந்த பிரமுகர்கள் பாரதியாரின் திருவுருவச் சிலைக்கு மலர்மாலை அணிவித்து தமது வணக்கத்தினை செலுத்தினர். அதனைத் தொடர்ந்து மாணவர்கள் தமிழ்த்தாய் வாழ்த்துடன் பாரதியாரின் சில பாடல்களையும் பாடினர்.

4. உள்ளூர் ஊடகவியலாளர்கள் பலரும் இவ் அஞ்சலி நிகழ்வுகளில் கலந்து கொண்டனர். இத்துடன் நிகழ்வு தொடர்பான புகைப்படங்கள் இணைக்கப்பட்டுள்ளன.

***

11 டிசம்பர் 2019